செ.வெ.எண்-33 நாள்-17.02.2018

# அரியலூரில் தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவனத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூரில் உள்ள தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவனத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் **திரு.எம்.சி.சம்பத்** அவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், அரசு முதன்மை செயலாளர் மற்றும் அரசு சிமெண்ட் நிறுவன மேலாண் இயக்குநர் **திருமதி.டி.சபிதா, இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோருடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் 110விதியின் கீழ் தமிழ்நாடு அரசு சிமெண்ட் நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக புதிய ஆலை அமைக்கும் பணிகளுக்காக **ரூ.850 கோடி** மதிப்பில் பணிகள் மேற்கொள்ள ஆணை வெளியிட்டார்கள்.

அதன்படி, தற்போது புதிய ஆலை அமைக்கும் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருவதை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, கட்டுமான பணிகளின் வரைபடங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

புதிய ஆலையில், கல் நொறுக்கும் பிரிவு, குவியல் பிரிவு ஆகிய கட்டுமான பணிகளையும், அறவை ஆலை மூலம் கறி எரிக்கும் கில்லன் பிரிவுகளையும், 110kv துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளையும், 30 டன் கொள்ளளவு கொண்ட கிளிங்கர் சேகரிக்கும் பகுதிகளையும் நேரில் பார்வையிட்டு, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் **திரு.எம்.சி.சம்பத்** அவர்கள் பணிகளை விரைவாகவும், நல்ல முறையிலும் முடிக்குமாறு சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வின்போது, ஆலை அலகு தலைவர் (Unit Head) மாரிக்கணி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.